

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, 30th January 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Panchayat Courts

* 241 *Q*.—SRI S. M. ANNAMALAI : *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 22-ந் தேதியில் 383-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி பஞ்சாயத்து நீதி மன்றங்களை ஏற்படுத்துவது குறித்து மத்திய சர்க்காரின் முடிவு தெரிவிக்கப்பட்டதா ?

(இ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government of India have constituted a Study Team to go into the question of the composition and functions of Village Courts. The recommendations of this Team are awaited.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : *பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் ஏற்பட்ட இடங்களில் எல்லாம் சிவில் வழக்குகள், 1958-ம் ஆண்டு சட்டப்படி சிவில் வழக்குகள், வாங்கக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த வழக்குகளை யார் வாங்குவது, யார் பரிசீலிப்பது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்து விட்டார்களா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *தனிக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.*

SRI S. LAZAR : *இதுவரை இந்தச் சட்டத்தின்கீழ் இயங்கி வரக்கூடிய கிராமாந்திரக் கோர்ட்கள் எப்படி நடந்து கொண்டு வந்திருக்கின்றன ? அதுபற்றிய கருத்து அரசாங்கத் தினிடம் ஏதாவது இருக்கிறதா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *அதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.*

SRI S. M. ANNAMALAI : இந்த கமிட்டி ரிப்போர்ட் சர்க்காருக்கு கிடைப்பதற்கு முன் 1958-ம் ஆண்டு சட்டம் அமுலுக்கு வந்து விட்டதே, அது பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் ஏற்பட்ட இடங்களில் அமுலுக்கு வந்து விட்டது. அந்த இடங்களில் வழக்குகளை வாங்கி விசாரிக்க யாருக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதை கிராமாந்திர மக்கள் தெரிந்து கொள்வதற்கு அதுபற்றி விளக்கமாக சர்க்கார் ஒரு அறிக்கை விடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்டடி டீம் என்று சொன்னேன். அவர்கள் பரிசீலனை செய்து சிபார்சுகள் அனுப்பித்தால் இந்தியா பூராவும் ஒரேமாதிரி அமைக்கவேண்டுமென்ற எண்ணமில்லை. அந்தந்த ராஜ்யங்களில் நிலைமை, சட்டம், வழக்கங்கள் இதையெல்லாம் வைத்து அதற்கேற்றபடி மாறுதல் ஏற்படும். மாறுதல்கள் ஏற்படும்போது அப்போதைக்கப்போது மக்களுக்கும் தெரிவிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : பஞ்சாயத்து கௌன்சில்களுக்கு இதுவரை இல்லாத அதிகாரங்கள் எல்லாம் நிரம்ப கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னிருந்த அதிகாரங்களை, கிரிமினல், சிவில் கேஸ்களை அவர்கள் விசாரிப்பதிலிருந்து அந்த அதிகாரத்தை எடுக்க என்ன முக்கிய காரணம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கிராம அபிவிருத்தி, கிராம நிர்வாகம் என்பது ஒரு விஷயம். நீதி விசாரித்து நீதி செலுத்துவது வேறு விஷயம் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்ட்களுக்கு, அதைக் கொடுப்பது முறையா, திருப்திகரமாக இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்துதான் முடிவாக ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

Marketing Committees (staff)

* 242 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மார்கெட்டிங் கமிட்டி சிப்பந்திகளுக்கு சென்னை சர்க்கார் சம்பள திட்டப்படி சம்பள உயர்வு, மற்ற சலுகைகள் அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

(உ) இல்லை என்றால், ஏன் ?

(எ) இனிமேல் அமுல்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) Does not arise.